winmeen.com

# இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

## டிசம்பர் 2022

டிசம்பர் 08-14

**1. உலக வங்கியின் இந்திய வளர்ச்சிக் கணிப்பு அறிக்கையின்படி, 2022–23க்கான இந்தியாவின் GDP வளர்ச்சி சதவீதம் என்ன?**

அ. 8.1%

ஆ. 7.5%

இ. 7.2%

**ஈ. 6.9% ☑**

- ✓ இந்தியாவின் நடப்பு நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி கணிப்பை 6.9 சதவீதமாக உலக வங்கி உயர்த்தியுள்ளது. 2023–24 நிதியாண்டில் பொருளாதாரம் சற்றுக் குறைந்த வீதத்தில் 6.6 சதவீதமாக வளரும் என்று உலக வங்கியின் இந்திய வளர்ச்சிக் கணிப்பு அறிக்கை தெரிவித்துள்ளது.

**2. 2022 டிசம்பரில் நடந்த பணவியல் கொள்கைக் குழுக் கூட்டத்திற்குப் பிறகு, ரெப்போ விகிதம் என்ன?**

அ. 5.9%

**ஆ. 6.25% ☑**

இ. 6.50%

ஈ. 6.75%

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) ரெப்போ விகிதத்தை 35 காசுகள் அதிகரித்து 6.25 சதவீதமாக உயர்த்த முடிவு செய்துள்ளது. இதனையடுத்து நிலையான வைப்புத்தொகை வசதி வீதம் 6 சதவீதமாக இருக்கும். வங்கிகளுக்கு இடையிலான தினசரி வணிகத்தின்போது, சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை சரிசெய்வதற்காக அறிமுகப் படுத்தப்பட்ட மார்ஜினல் ஸ்டாண்டிங் ஃபெசிலிட்டி எனப்படும் MSF வீதம் 6.50 சதவீதமாக இருக்கும். இந்த நிதி ஆண்டில் மத்திய வங்கியின் ஐந்தாவது வட்டி விகித உயர்வு இதுவாகும்.

**3. அண்மையில் வங்கக்கடலில் உருவாகி, தென் மாநிலங்களின் கரையைக் கடக்கவுள்ள புயல் எது?**

**அ. மாண்டஸ் ☑**

ஆ. அஸானி

இ. சித்ராங்

ஈ. மோக்கா



- ✓ சென்னைக்கு தென்கிழக்கே 620 கிலோ மீட்டர் தொலைவில் தென்மேற்கு வங்கக்கடலில் மாண்டூஸ் புயல் மையம் கொண்டுள்ளது. இந்தப் புயல் புதுச்சேரி மற்றும் ஸ்ரீஹரிகோட்டா இடையே வட தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திர பிரதேசத்தில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளது. இதன் தாக்கத்தால், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திர பிரதேசத்தின் கடலோரப் பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மிகக்கனமழை பெய்யும். கடலோர ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு ஏற்கெனவே, 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது.


**4. அண்மையில் காலமான Y K அலக் என்பார் ஒரு______?**

**அ. பொருளாதார நிபுணர் ☑**

ஆ. விளையாட்டு வீரர்

இ. தொழிலதிபர்

ஈ. அறிவியலாளர்



- ✓ மூத்த பொருளாதார நிபுணரும், முன்னாள் நடுவண் அமைச்சருமான யோகிந்தர் K அலக், அண்மையில் தனது 83ஆவது வயதில் காலமானார். அவர் 1996–98 காலகட்டத்தில், திட்டமிடல் மற்றும் திட்ட அமலாக்கம், அறிவியல் மற்றும் தொழினுட்பம் மற்றும் எரிசக்தித்துறை நடுவணமைச்சராக இருந்தார். தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

**5. '12ஆவது உலக ஹிந்தி மாநாட்டை' நடத்தும் நாடு எது?**

அ. இந்தியா

ஆ. இலங்கை

இ. தாய்லாந்து

**ஈ. ஃபிஜி ☑**




- ✓ '12ஆவது உலக ஹிந்தி மாநாடு' 2023 பிப்ரவரியில் பிஜியில் பிஜி அரசாங்கத்துடன் இணைந்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்த மாநாட்டிற்கான முதன்மை கருப்பொருள், "Hindi: From Traditional Knowledge to Artificial Intelligence" என்பதாகும். இதுவரை பதினொரு உலக ஹிந்தி மாநாடுகள் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்டுள்ளன.

**6. 2022 – தேசிய மின்னாளுகை மாநாட்டை நடத்துகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. கர்நாடகா

ஆ. மகாராஷ்டிரா

இ. அஸ்ஸாம்

**ஈ. ஜம்மு–காஷ்மீர் ☑**



- ✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர் துறையும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் ஜம்மு மற்றும் காஷ்மீரின் கத்ராவில் 25ஆவது தேசிய மின்னாளுகை மாநாட்டை (NCeG) நடத்த உள்ளன. இந்த மாநாட்டின் கருப்பொருள், "Bringing Citizens, Industry and Government closer" என்பதாகும். தேசிய மின்னாளுகை விருதுகள் அனைத்தும் NAeG திட்டம் – 2022இன் ஐந்து வகைகளின்கீழ் வழங்கப்படும்.

**7. அண்மையில் கண்டறியப்பட்ட, '*Lophopetalum tanahgambut*' என்பது சார்ந்த இனம் எது?**

**அ. மரம் ☑**

ஆ. மீன்

இ. பூஞ்சை

ஈ. சிலந்தி



- ✓ *Lophopetalum tanahgambut* என்பது தனிச்சார்பற்ற குடும்பமான Celastraceaeஇல் உள்ள Lophopetalum இனத்தைச் சார்ந்த புதிதாக அடையாளம் காணப்பட்ட மர இனமாகும். 40 மீ உயரம் வரை வளரும் இம்மரத்தின் தண்டு விட்டம் 1.05 மீட்டர் வரை இருக்கும். இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் சேற்றுச் சதுப்பு நிலக் காடுகளில் மட்டுமே இந்தப் புதிய இனங்கள் காணப்படுகின்றன.

**8. காசிம்–ஜோமார்ட் டோகாயேவ் என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. ஈரான் ஆ. இஸ்ரேல்

**இ. கஜகஸ்தான் ☑** ஈ. துருக்கி



✓ கஜகஸ்தான் அதிபர் தேர்தலில் 81.3% வாக்குகளைப் பெற்று Kassym–Jomart Tokayev இரண்டாவது முறையாக அதிபராகப் பதவியேற்றுள்ளார். டோகாயேவ், 2019இல் தனது முதல் தேர்தலில் தனது முன்னோடி நர்சுல்தான் நசர்பயேவின் ஆதரவுடன் வெற்றி பெற்றார். நசர்பயேவ் கசக் மொழியில் 'எல்பாஸி' (தேசத்தின் தலைவர்) என்ற பட்டத்தைத் தக்கவைத்துக்கொண்டார்.

### 9. 2021–22க்கான 'தேசிய ஸ்வச் வித்யாலயா புரஸ்காரை' வழங்குகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. ஜல் சக்தி அமைச்சகம்

**ஆ. கல்வி அமைச்சகம் ☑**

இ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

ஈ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ 2021–22 கல்வியாண்டுக்கான ஸ்வச் வித்யாலயா புரஸ்காரை நாடு முழுவதுமிருந்து 39 பள்ளிகள் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது. 8.23 லட்சம் பதிவுகளில், 28 அரசு மற்றும் உதவி பெறும் நிறுவனங்கள் மற்றும் 11 தனியார் பள்ளிகள் தேர்வுசெய்யப்பட்டன. ஆறு பரந்த அளவுகோல்களின் அடிப்படையில் விருதுக்கான பள்ளிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவை COVID–19 (தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நிலை), சோப்பினால் கைகழுவுதல், கழிப்பறைகள், செயல்பாடு மற்றும் பராமரிப்பு, நடத்தை மாற்றம் மற்றும் தண்ணீர் ஆகியனவாகும்.

### 10. ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (JNPA) அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கேரளா

ஈ. கர்நாடகா



✓ மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையமானது இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – மெட்ராஸ் உடன் இணைந்து, தொடர்ச்சியான கடல் நீர் தர கண்காணிப்பு நிலையத்தை (Continuous Marine Water Quality Monitoring Station) உருவாக்கியது. தொடர்ச்சியான கடல் நீர்தர கண்காணிப்பு அமைப்பும் மின்சார கண்காணிப்பு வாகனமும் துறைமுகப் பகுதியில் கடல்நீர் மற்றும் காற்றின் தரத்தை நிர்வகிக்க உதவும். மின்சாரத்தில் இயங்கும் ஒரு சுற்றுச்சூழல் கண்காணிப்பு வாகனமும் (EV) துறைமுகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 9ஆவது உலக ஆயுர்வேத மாநாடு மற்றும் ஆரோக்யா கண்காட்சி – 2022 கோவாவில் தொடங்கியது.**

9ஆவது உலக ஆயுர்வேத மாநாடானது கோவாவின் பனாஜியில் நடுவண் சுற்றுலா மற்றும் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் நீர்வழிப்பாதைகள் துறை இணையமைச்சர் ஸ்ரீபத் நாயக் முன்னிலையில் தொடங்கியது. 9ஆவது உலக ஆயுர்வேத மாநாடு, உலகளவில் ஆயுஷ் மருத்துவ முறைகளின் செயல்திறன் மற்றும் வலிமையை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**2. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்; முதல்வர் மு க ஸ்டாலின் இன்று தொடக்கி வைக்கிறார்.**

தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தை கண்காணிக்கும் வகையில், அதற்கென தனி இயக்கம் உருவாக்கப்படுகிறது. இந்த இயக்கத்தை முதல்வர் மு க ஸ்டாலின் சென்னையில் தொடக்கி வைக்கிறார். மாவட்ட அளவிலான காலநிலை மாற்ற இயக்கங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைவராக இருப்பார். மாவட்ட காலநிலை அதிகாரியாக மாவட்ட வன

அலுவலர் இருப்பார். மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு திட்டப்பணியிலும், காலநிலை மாற்றத்தால் பாதிப்பு ஏதேனும் உள்ளதா என மாவட்ட இயக்கம் ஆராய வேண்டும்.

காற்றாலை, சூரியவொளி மின்சாரம், மின்வாகனம்போன்ற சுற்றுச்சூழலுக்குகந்த தொழினுட்பங்களை ஊக்குவிக்க வேண்டும். மாவட்ட அளவில் காலநிலைமாற்ற தணிப்பு திட்டங்களை உருவாக்குவதே காலநிலை மாற்ற இயக்கத்தின் குறிக்கோள்களாகும். மாநில அளவிலான இயக்கத்துக்கு முதலமைச்சர் தலைவராக இருப்பார்.

---

**3. சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கம்.**

இந்தியாவில் முதல்முறையாக சென்னையில் தொழில்நுட்பம், தொழில்முனைவு, திறன் சமர்பிப்பு–Umagine மாநாடு என்னும் தலைப்பில் சர்வதேச கருத்தரங்கம் நடைபெறுகிறது. இதில் பல்வேறு நாடுகளிலிருந்து 250 தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்பட 10,000 பேர் கலந்துகொள்கின்றனர். இதில் தொழில்நுட்பங்கள் குறித்து தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீது விவாதங்கள் நடத்தப்படும். இக்கருத்தரங்கத்தை நடத்துவது தொடர்பாக பிரான்ஸ் நாட்டுடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

---

**1. 'இந்தியாவின் குளிரூட்டும் துறையில் காலநிலை முதலீட்டு வாய்ப்புகள்' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. NITI ஆயோக்

**ஆ. உலக வங்கி ☑**

இ. உலக பொருளாதார மன்றம்

ஈ. பன்னாட்டு செலவாணி நிதியம்

✓ உலக வங்கி சமீபத்தில், 'இந்தியாவின் குளிரூட்டும் துறையில் காலநிலை முதலீட்டு வாய்ப்புகள்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. கேரள மாநில அரசுடன் இணைந்து உலக வங்கி ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள், 'இந்திய காலநிலை மற்றும் மேம்பாட்டு கூட்டாளர்கள்' சந்திப்பின்போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, இந்தியா அதிக வெப்பநிலையை அனுபவித்து வருகிறது. முன்கூட்டியே இந்நிலைக்கு ஆளாகியுள்ளது இந்தியா. மனிதரின் உயிர்வாழும் வரம்பைத் தாண்டிய வெப்ப அலைகளை கொண்டிருக்கும் உலக நாடுகளுள் இந்தியாவும் ஒன்றென உள்ளது.

**2. 'ஸ்ட்ரெப் A' என்ற பாக்டீரியா தொற்றுநோயால் குழந்தைகள் இறந்த நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. ஐக்கிய இராச்சியம் ☑**

இ. ஜெர்மனி

ஈ. வங்காளதேசம்



✓ ஐக்கிய இராச்சியத்தில் 'ஸ்ட்ரெப் ஏ' என்ற பாக்டீரியா தொற்று காரணமாக குறைந்தது 6 குழந்தைகள் இறந்துள்ளனர். இந்தப் பாக்டீரியா இரத்த ஓட்டத்தில் நுழையும் போது, தொற்று தீவிரமடையும். அது அப்போது invasive Group A Strep (iGAS) என்று அழைக்கப்படுகிறது. ஸ்ட்ரெப் ஏ–இன் அறிகுறிகளில் காய்ச்சல், தோல் வெடிப்பு மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளால் எளிதில் சிகிச்சையளிக்கப்படும் புண் ஆகியவை அடங்கும். நவம்பரில் ஒரு வாரத்தில் மட்டும் 851 ஸ்ட்ரெப் ஏ பாதிப்புகள் பதிவாகியுள்ளன. முந்தைய ஆண்டுகளில் இதே வேளையில் சராசரியாக 186 பாதிப்புகள் பதிவாகியிருந்தன.

**3. 'காயங்கள் மற்றும் வன்முறையைத் தடுத்தல்: ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. UNICEF

**ஆ. WHO ☑**

இ. UNESCO

ஈ. UN Women

✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) 'காயங்கள் மற்றும் வன்முறையைத் தடுத்தல்: ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பிலான ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது. ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் காயங்கள் மற்றும் வன்முறைகளால் சுமார் 12,000 இறப்புகள் ஏற்படுவதாக அவ்வறிக்கை கூறுகிறது. காயம் தொடர்பான இறப்புகளைத் தடுப்பதற்கான முயற்சிகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது. உலகளவில் 12 இறப்புகளில் 1 இதன் காரணமாக நிகழ்கிறது. சாலைப் போக்குவரத்து காயங்கள், கொலை மற்றும் தற்கொலை ஆகியவை 5–29 வயதுடையவர்களிடையே மரணத்திற்கான முதல் ஐந்து காரணங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன.

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற துங்கரேஷ்வர் வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**




அ. கர்நாடகா

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. கேரளா

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ இந்தியாவில் உள்ள அனைத்து பாதுகாக்கப்பட்ட பகுதிகளையும் சுற்றி 1 கிமீ சுற்றளவுக்கு சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களை உருவாக்குவதை கட்டாயமாக்கிய உச்சநீதிமன்றம், மகாராஷ்டிர மாநிலத்தின் துங்கரேஷ்வர் வனவுயிரி சரணாலயத்திற்கு மட்டும் விதிவிலக்கு அளித்துள்ளது. சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களை உருவாக்குவதற்கான ஒரே மாதிரியான ஆணையைப் பெறுவதற்கு முன்பு நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் கள உண்மைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அது கூறியுள்ளது. இந்தச்சரணாலயம் மும்பையின் புறநகரப் பகுதியில் அமைந்துள்ளது.

**5. 2022 – ஆர்டன் கேபிடல் கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ. 80 **ஆ. 87 ☑**

இ. 92 ஈ. 95

✓ ஆர்டன் கேபிட்டல் வெளியிட்ட 2022 – கடவுச்சீட்டு குறியீடு என்பது உலகின் வலிமையான மற்றும் பலவீனமான கடவுச்சீட்டுகளின் தரவரிசையாகும். உலகின் வலிமையான கடவுச்சீட்டு பட்டியலில் இந்தியா 87ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகம் முதலிடத்திலும், ஜெர்மனி, சுவீடன், பின்லாந்து, லக்சம்பர்க், ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. ஆப்கானிஸ்தான் கடைசி இடத்திலும், பாகிஸ்தான் 94ஆவது இடத்திலும் உள்ளது.

**6. கராகஸ் என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் தலைநகரமாகும்?**



அ. ஈரான்

**ஆ. வெனிசுலா ☑**

இ. பப்புவா நியூ கினி

ஈ. அர்ஜென்டினா

✓ இந்தியாவும் வெனிசுலாவும் இணைந்து நான்காம் சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை வெனிசுலாவின் தலைநகரமான கராகஸில் நடத்தின. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின்படி, அரசியல், வர்த்தகம், எரிசக்தி, சுகாதாரம் மற்றும் மருந்துகள், ஆயுர்வேதம் மற்றும் யோகா, வேளாண்மை, கலாச்சாரம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்போன்ற துறைகளை உள்ளடக்கிய இருதரப்பு உறவுகளை இருதரப்பும் மதிப்பாய்வு செய்தன.

**7. வழிகாட்டுதல், ஆலோசனை, உதவி, நெகிழ்திறன் மற்றும் வளர்ச்சி (Mentorship, Advisory, Assistance, Resilience and Growth – MAARG) என்ற இணையதளத்தை தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?**

**அ. வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகம்

ஈ. தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

वाणिज्य एवं
उद्योग मंत्रालय
MINISTRY OF
COMMERCE
AND INDUSTRY
सत्यमेव जयते

✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழியங்கும் தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கான துறை MAARG இணையதளத்தில் பதிவுசெய்வதற்கு ஸ்டார்ட்–அப் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. MAARG (வழிகாட்டுதல், ஆலோசனை, உதவி, நெகிழ்திறன் மற்றும் வளர்ச்சி)

இணையதளமானது பல்வேறு துறைகள், செயற்பாடுகள், நிலைகளிலுள்ள ஸ்டார்ட்அப்களுக்கான வழிகாட்டுதலை எளிதாக்குவதற்கான ஒரே தளமாக விளங்கும்.

**8. அன்வர் இப்ரகிம் என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றார்?**



அ. சிங்கப்பூர்

**ஆ. மலேசியா ☑**

இ. ஆப்கானிஸ்தான்

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

✓ மலேசியாவின் மூத்த எதிர்க்கட்சித்தலைவர் அன்வர் இப்ரகிம், அந்நாட்டின் புதிய பிரதமராக அண்மையில் பதவி ஏற்றார். எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து ஏற்பட்ட தேக்கநிலையைத் தொடர்ந்து புதிய பிரதமரை மலேசிய மன்னர் அறிவித்தார். மலேசியாவின் வாழ்வினச்செலவு அதிகரித்து வருவதைச் சமாளித்து ஊழலுக்கு எதிராகப் போராடப் போவதாக அன்வர் கூறியுள்ளார்.

**9. டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் (C–DOT) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. குருகிராம்

ஈ. கொல்கத்தா

सी-डॉट
C-DOT

✓ டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையம் (C–DOT) என்பது இந்திய அரசுக்குச்சொந்தமான தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாகும். இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது. நடுவண் அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், C–DOT டெலிமேட்டிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் தில்லி வளாகத்தில் தொழில்முனைவோர் பிரிவு மற்றும் புத்தாக்க மையத்தை திறந்து வைத்தார்.

**10. முதலாவது இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. கம்போடியா ☑**

இ. தாய்லாந்து

ஈ. லாவோஸ்

✓ இந்தியா–ஆசியான் உறவுகளின் முப்பதாவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இந்தியா–ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் கம்போடியாவில் உள்ள சீம் ரீப்பில் நடைபெற்றது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் பெண்களுக்கான முன்முனைவு மற்றும் கடலில் நெகிழி மாசுபாடு குறித்த முன்முனைவு உட்பட இரண்டு திட்டங்களை முன்வைத்தார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கலங்கரை விளக்க சுற்றுலாத் திட்டங்கள்**

நாடு முழுவதுமுள்ள 65 கலங்கரை விளக்கங்களில் அரசு மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு (11), குஜராத் (13), கேரளா (10), மகாராஷ்டிரா (5), கர்நாடகா (5), ஒடிஸா (5), மேற்கு வங்காளம் (3), அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் (2), இலட்சத்தீவுகள் (1), கோவா (1). தமிழ்நாட்டில் பதினொரு கலங்கரை விளக்கங்கள் இத்திட்டத்தின்கீழ் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, கூத்தங்குழி, மணப்பாடு, கீழக்கரை, தனுஷ்கோடி, பாம்பன், மல்லிப் பட்டினம், கோடியக்கரை, நாகப்பட்டினம், பூம்புகார், பழவேற்காடு போன்ற கலங்கரை விளக்கங்களில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் சுற்றுலா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

---

**2. கடல் அலையிலிருந்து மின்சாரம்: சென்னை ஐஐடி கண்டுபிடிப்பு.**

கடல் அலைகளிலிருந்து ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவியை சென்னை ஐஐடி ஆய்வுக் குழுவினர் வடிவமைத்துள்ளனர். 'சிந்துஜா–1' என அழைக்கப்படும் இந்தக் கருவி தூத்துக்குடி கடலின் உள்ளே ஆறு கிமீ தொலைவில் 20 மீட்டர் ஆழத்தில் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவி தற்போது 100 வாட்ஸ் ஆற்றலை உற்பத்தி செய்யும். அடுத்த மூன்றாண்டுகளில், கடல் அலையிலிருந்து ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

---

**1. இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) கீழ்க்காணும் எந்த நாட்டின் நாணய ஆணையத்துடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

அ. சீனா

ஆ. ரஷ்யா

**இ. மாலத்தீவுகள் ☑**

ஈ. இலங்கை



✓ இந்திய ரிசர்வ் வங்கியானது சார்க் நாணய மாறுகொள் கட்டமைப்பின்கீழ் மாலத்தீவுகள் நாணய ஆணையத்துடன் (Maldives Monetary Authority) நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் MMAஐ ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகபட்சம் $200 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை பல தவணைகளில் பெற உதவும்.

**2. அண்மையில், கீழ்க்காணும் எந்த நாட்டின் முதல் பெண் அதிபராக டினா பொலுவார்டே தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

அ. பிரான்ஸ்

**ஆ. பெரு ☑**

இ. பிரேசில்

ஈ. ஆஸ்திரேலியா



✓ பெரு நாட்டின் அதிபராக இருந்த பெட்ரோ காஸ்டிலோ, காங்கிரஸால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். துணை அதிபர் டினா பொலுவார்டே, பெருவின் அடுத்த அதிபராகிறார். காஸ்டிலோ, சட்ட ஒழுங்கை சீர்குலைக்க முயன்றார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் காஸ்டிலோ, சட்டமன்றத்தை கலைத்து, அரசாங்கத்தை ஒருதலை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முயற்சித்த குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். இதனால் துணை அதிபர் டினா பொலுவார்டே, பெரு நாட்டின் வரலாற்றில் முதல் பெண் அதிபராக பதவியேற்க உள்ளார்.

**3. உட்கட்டமைப்பிற்கு ஊக்கமளிக்கும் நோக்கத்திற்காக இந்தியாவின் முதல் பிணைமுறி காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கவுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

**அ. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

ஆ. நிதி அமைச்சகம்

இ. தகவல் தொடர்பு அமைச்சகம்

ஈ. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

सड़क परिवहन एवं राजमार्ग मंत्रालय
MINISTRY OF ROAD TRANSPORT AND HIGHWAYS
सत्यमेव जयते

✓ நடுவண் அமைச்சர் நிதின் கட்கரியின் கூற்றுப்படி, உட்கட்டமைப்புத் துறையில் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்திற்காக இந்தியாவின் முதல் பிணைமுறி காப்பீட்டுத் திட்டத்தை நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் அறிமுகப்படுத்தும். வங்கி பிணைகளில் சிக்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் செயற்பாட்டு மூலதனத்திற்கு நிவாரணமளிப்பதன்மூலம் உட்கட்டமைப்புத்துறையில் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்கு இந்தப் பிணைமுறிகள் உதவும்.

**4. சென்னை மெட்ரோ இரயில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக $780 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான கடன்தொகையை வழங்கவுள்ள நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ADB ASIAN DEVELOPMENT BANK

இ. IMF

ஈ. AIIB

- ✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது சென்னை மெட்ரோ இரயில் வலையமைப்பில் புதிய வழித்தடங்களை உருவாக்க மற்றும் பேருந்து மற்றும் பிற போக்குவரத்துச் சேவைகளுடன் மெட்ரோ இரயில் வலையமைப்பின் இணைப்பை மேம்படுத்துவதற்காக $780 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்மூலம் 10.1 கிமீ நீளத்திற்கு உயர்மட்டப் பிரிவு, ஒன்பது மெட்ரோ இரயில் நிலையங்கள், 10 கிமீட்டர் நீளத்திற்கு நிலத்தடிப்பிரிவு ஆகியவை அமைக்கப்படும். இந்த நிலையங்கள் பேரிடர் & பல்வேறு காலநிலைகளில் தாக்குப்பிடிக்கக்கூடியதாகவும், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்படும்.

**5. ஒன்பதாவது உலக ஆயுர்வேத மாநாடு மற்றும் ஆரோக்யா கண்காட்சி–2022ஐ நடத்துகிற மாநிலம்/UT எது?**

அ. குஜராத்

**ஆ. கோவா ☑**

இ. தெலுங்கானா

ஈ. பீகார்

- ✓ 9ஆவது உலக ஆயுர்வேத மாநாடானது கோவா மாநிலம் பனாஜியில் தொடங்கியது. உலகளவில் ஆயுஷ் மருத்துவ முறைகளின் செயல்திறன் மற்றும் வலிமையை வெளிப்படுத்துவதை இது தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்வின் சமயம், 'ஆயுஷ்மான்' காமிக் புத்தகத் தொடரின் மூன்றாவது பதிப்பும் வெளியிடப்பட்டது. அகில இந்திய ஆயுர்வேத கல்விக்கழகம், ஜெர்மனியிலுள்ள ரோசன்பர்க் ஐரோப்பிய ஆயுர்வேத அகாடமி ஆகியவற்றுக்கு இடையே பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகளில் மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**6. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் (AICTE) புதிய தலைவராக (2022இல்) நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. T G சீத்தாராம் ☑**

ஆ. மனோஜ் சோனி

இ. நிதி சிப்பர்

ஈ. வினீத் ஜோஷி



- ✓ அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் (AICTE) புதிய தலைவராக கௌகாத்தி–ஐஐடிஇன் இயக்குநர் பேராசிரியர் T G சீத்தாராம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்பு UGC தலைவர் M ஜெகதேஷ் குமார் இப்பதவியில் இருந்தார். M ஜெகதேஷ் குமாரிடமிருந்து பொறுப்பை ஏற்றுக்கொண்ட T G சீத்தாராம் மூன்றாண்டு காலம் இந்தப் பதவியில் இருப்பார். பேராசிரியர் T G சீத்தாராம், அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தின் (SERB) உறுப்பினராகவும், பெங்களூர், IIScஇன் குடிசார் பொறியியல் பிரிவில் மூத்த பேராசிரியராகவும் உள்ளார்.

**7. அமெரிக்காவைச் சார்ந்த மார்னிங் கன்சல்ட் வெளியிட்ட குளோபல் லீடர் அப்ரூவல் மதிப்பீடுகளின்படி, உலகின் மிகவும் பிரபலமான தலைவர் யார்?**

அ. ஜோ பிடன்

**ஆ. நரேந்திர மோதி ☑**

இ. மு க ஸ்டாலின்

ஈ. விளாடிமிர் புடின்



- ✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி 77 சதவீத ஒப்புதல் மதிப்பீட்டுடன் உலகின் மிகவும் பிரபலமான தலைவராகத் தொடர்கிறார். அமெரிக்காவைச் சார்ந்த ஆலோசனை நிறுவனமான மார்னிங் கன்சல்ட் வெளியிட்ட குளோபல் லீடர் அப்ரூவல் மதிப்பீடுகளில் இது தெரியவந்துள்ளது. மெக்சிகோ அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் இரண்டாமிடத்தையும், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளனர்.

**8. CITES தீர்மானத்தின் பிற்சேர்க்கை–IIஇலிருந்து பிற்சேர்க்கை–Iக்கு கீழ்க்காணும் எந்த உயிரினத்தை மாற்றிப் பட்டியலிட இந்தியா முன்மொழிந்துள்ளது?**



**அ. லீத்தின் மெல்லோட்டு ஆமை ☑**

ஆ. பர்மிய மயில் வண்ண மெல்லோட்டு ஆமை

இ. இந்திய மெல்லோட்டு ஆமை

ஈ. பர்மிய குறுந்தலையுடைய மெல்லோட்டு ஆமை

✓ அழிந்துவரும் வனவுயிரிகளின் சர்வதேச வர்த்தகம் (CITES) தொடர்பான கூட்டமைப்பின் பிற்சேர்க்கை–IIஇலிருந்து லீத்தின் மெல்லோட்டு ஆமையை (Leith's Softshell Turtle – *Nilssonia leithi*) பிற்சேர்க்கை–Iக்கு மாற்றிப்பட்டியலிட இந்தியா முன்மொழிந்துள்ளது. பனாமாவில் நடைபெற்ற CITESஇன் 19ஆவது கூட்டத்தில் இந்த முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. லீத்தின் மெல்லோட்டு ஆமை என்பது மென்மையான ஓடுகொண்ட ஒரு பெரிய நன்னீர் ஆமை ஆகும்; இது தீபகற்ப இந்தியாவில் மட்டுமே காணப்படுகிறது.

**9. ஐந்து வெவ்வேறு உலகக்கோப்பைகளில் கோலடித்த முதல் கால்பந்து வீரர் யார்?**



அ. லியோனல் மெஸ்ஸி

**ஆ. கிறிஸ்டியானோ ரொனால்டோ ☑**

இ. நெய்மர்

ஈ. கைலியன் பாப்பே

✓ போர்ச்சுகல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 5 வெவ்வேறு உலகக்கோப்பை போட்டிகளில் கோல் அடித்த முதல் வீரர் ஆவார். 2006, 2010, 2014, 2018, 2022 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக்கோப்பை தொடர்களில் ரொனோல்டோ கோலடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கானாவுக்கு எதிரான குரூப்–H போட்டியில் 65ஆவது நிமிடத்தில் கோலடித்து ரொனோல்டோ இந்த மைல்கல் சாதனையை எட்டினார்.

**10. 'RH–200' என்ற ஆய்வு ஏவுகணையை ஏவிய நாடு எது?**



அ. ரஷ்யா

**ஆ. இந்தியா ☑**

இ. இஸ்ரேல்

ஈ. ஈரான்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) தொடர்ந்து 200ஆவது முறையாக 'RH–200' ஆய்வு ஏவுகணையை ஏவியது. வானிலை, வானியல் மற்றும் விண்வெளி இயற்பியலின் ஒத்த பிரிவுகளில் சோதனைகளை மேற்கொள்வ –தற்கு இந்திய ஆய்வு ஏவுகணைகள் (sounding rockets) பயன்படுத்தப்படுகின்றன.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 130 ஆண்டுகளில் 13ஆவது புயல்!**

கடந்த 1891 முதல் 2021 வரையிலான 130 ஆண்டுகாலத்தில் சென்னை மற்றும் புதுச்சேரி இடையே 12 புயல்கள் கரையைக் கடந்துள்ளன. சென்னை–புதுச்சேரி இடையே கரையைக் கடந்த 13–ஆவது புயலாக 'மாண்டஸ்' ஆனது.

---

**2. 10-12-2022 – 'மூதறிஞர்' இராஜாஜியின் 144ஆவது பிறந்தநாள்.**

---

**3. 2025ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்கத் திட்டம்: நடுவண் அரசு.**

2025ஆம் ஆண்டுக்குள் நாட்டில் காசநோயை ஒழிக்க நடுவணரசு திட்டமிட்டுள்ளது. நாட்டில் நிகழாண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை 20.16 இலட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்ட நிலையில், அந்த நோயால் 73,551 பேர் இறந்தனர். உலகளாவிய காசநோய் அறிக்கை-2022இன்படி, நாட்டில் காசநோய் பாதிப்பு 18% குறைந்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இந்தியாவில் லட்சத்தில் 256 பேர் அந்த நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு லட்சத்தில் 210 பேர் பாதிக்கப்பட்டனர். காசநோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் மாநில-மாவட்ட அளவிலான திட்டம், பலவீனமானவர்களிடமும் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களிடமும் காசநோய் பரிசோதனை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள்மூலம், 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டில் காசநோயை ஒழிக்க நடுவண் அரசு திட்டமிட்டுள்ளது.

---

**4. 11-12-2022 – 'மகாகவி' பாரதியாரின் 141ஆவது பிறந்தநாள்.**

---

**5. 'காசி தமிழ்ச்சங்கமம்' விரைவு இரயில்!**

'காசி தமிழ்ச்சங்கமம்' நிகழ்வை நினைவுகூரும் வகையில் காசி-தமிழ்நாட்டுக்கு இடையே 'காசி தமிழ்ச்சங்கமம்' விரைவு இரயில் என்ற புதிய இரயில்சேவை தொடங்கப்படும் என நடுவண் இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்துள்ளார்.

---

**1. சுக்விந்தர் சிங் சுகு என்பவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் முதலமைச்சராக பதவியேற்றார்?**



அ. கோவா

ஆ. குஜராத்

**இ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

ஈ. உத்தரகாண்ட்

✓ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் அடுத்த முதலமைச்சராக சுக்விந்தர் சிங் சுகு சமீபத்தில் பதவியேற்றார். அவர் நான்கு முறை சமஉ ஆகவும், காங்கிரஸின் மாநிலத் தேர்தல் பிரசாரக் குழு தலைவராகவும் இருந்தார். துணை முதல்வராக முகேஷ் அக்னிகோத்ரி தேர்வுசெய்யப்பட்டுள்ளார். ஹிமாச்சல பிரதேச மாநில சட்டசபை தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

**2. 'G20 வளர்ச்சிப் பணிக்குழு கூட்டம்' நடத்தப்படுகிற நகரம் எது?**




**அ. மும்பை ☑**

ஆ. வாரணாசி

இ. அகமதாபாத்

ஈ. சென்னை

✓ G20 வளர்ச்சிப் பணிக்குழுவின் நான்கு நாள் கூட்டம் இந்தியக்குடியரசுத்தலைவர் தலைமையின்கீழ் மும்பையில் தொடங்கவுள்ளது. வளர்ச்சிப் பணிக்குழு கூட்டமானது வளரும் நாடுகள், குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் தீவு நாடுகளின் வளர்ச்சிப் பிரச்சனைகளைப் பற்றி விவாதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. IUCN சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட *Meizotropis pellita* (Patwa) சார்ந்த இனம் எது?**



அ. ஆமை

**ஆ. மருத்துவத் தாவரம் ☑**

இ. பாம்பு

ஈ. வண்ணத்துப்பூச்சி

✓ இமயமலையில் காணப்படும் மூன்று மருத்துவத் தாவர இனங்கள் IUCN சிவப்புப் பட்டியலில், 'அச்சுறு நிலையை அண்மித்த இனப்'பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. பொதுவாக 'பட்வா' என்று அழைக்கப்படுகிற *Meizotropis pellita*, உத்தரகாண்டைப் பூர்வீகமாகக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. இது 'மிகவும் அருகிவிட்ட இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. *Fritilloria cirrhosa* 'அழிவாய்ப்பு இனம்' என்றும், *Dactylorhiza hatagirea* 'அருகிவிட்ட இனம்' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**4. 2022 – உலக மண் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




**அ. Soils: Where food begins ☑**

ஆ. Soils: Where life begins

இ. Soils: Where earth begins

ஈ. Soils: Where all begins

✓ வளம்மிகு மண்ணின் முக்கியத்துவத்தை சிறப்பித்துக்காட்டவும், மண் வளங்களை நிலையான மேலாண்மைக்காக பயன்படுத்துவது குறித்து எடுத்துக்கூறுவதற்குமாக ஆண்டுதோறும் டிசம்பர்.5ஆம் தேதி அன்று 'உலக மண் நாள்' அனுசரிக்கப்படுகிறது. "Soils: Where food begins" என்பது இந்த ஆண்டு (2022) உலக மண் நாளுக்கானக் கருப்

பொருளாகும். 2002ஆம் ஆண்டில் சர்வதேச மண் அறிவியல் சங்கத்தால் மண்ணைக் கொண்டாட ஒரு சர்வதேச நாள் பரிந்துரைக்கப்பட்டது. உணவு மற்றும் உழவு அமைப்பின் FAO மாநாடு கடந்த 2013 ஜூனில் உலக மண் நாளை அங்கீகரித்து பேரறிவிப்பு செய்தது.

**5. இந்தியாவின் முதல் கரிம–சமநிலை பண்ணை அமைக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ. அஸ்ஸாம்

ஆ. குஜராத்

**இ. கேரளா ☑**

ஈ. தெலுங்கானா

✓ இந்தியாவின் முதல் கரிம–சமநிலை பண்ணையாக கொச்சியின் ஆலுவாவிலுள்ள விதைப்பண்ணையை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அறிவித்தார். கரியமில வாயு ($CO_2$) உமிழ்வைக்குறைத்ததால், வேளாண் துறையின்கீழ் உள்ள அவ்விதைப்பண்ணை கரிம–சமநிலையை அடைய முடிந்துள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் அப்பண்ணையிலிருந்து வெளியேற்றப்பட்ட மொத்த கரியமில வாயுவின் அளவு 43 டன்கள் ஆகும்.

**6. 'மரபணு மாற்றப்பட்ட உணவுகளுக்கான விதிமுறைகளை' வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. FAO

**ஆ. FSSAI ☑**

இ. ISO

ஈ. NIT ஆயோக்

✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமானது (FSSAI) மரபணு மாற்றப்பட்ட (GM) உணவுப் பொருட்களுக்கான விதிமுறைகளின் புதிய வரைவை பொதுமக்களின் கருத்துக் கேட்புக்காக வெளியிட்டுள்ளது. 1% அல்லது அதற்கு மேற்பட்ட மரபணு மாற்றப்பட்ட (GM) மூலப்பொருள்களைக் கொண்ட உணவுப்பொருட்களுக்கான விவரங்களை பொருளின் பொதி அட்டையில் ஒட்ட இது முன்மொழிகிறது. FSSAIஇன் முன் அனுமதியின்றி, GMO கொண்டு தயாரிக்கப்படும் எந்தவொரு உணவு அல்லது உணவுப்பொருளையும் யாரும் தயாரிக்கவோ, கட்டவோ, சேமிக்கவோ, விற்கவோ, சந்தைப்படுத்தவோ அல்லது விநியோகிக்கவோ அல்லது இறக்குமதி செய்யவோ கூடாது.

**7. பௌத்தவனம் என்ற பௌத்த பாரம்பரிய நோக்கப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. பீகார்

**ஆ. தெலுங்கானா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. திரிபுரா

✓ பௌத்தவனம் என்ற பௌத்த பாரம்பரிய நோக்கப்பூங்கா திட்டமானது தெலுங்கானா மாநிலத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதனை நாகார்ஜுனாசாகரில் தெலுங்கானா மாநில சுற்றுலா வளர்ச்சிக்கழகம் உருவாக்கியுள்ளது. நாகார்ஜுனா சாகர் அருகே பல்வேறு நாடுகளின் பௌத்த மடாலயங்களையும் பௌத்த பல்கலைக்கழகத்தையும் அமைக்கவும் மாநகராட்சி ஆய்வுசெய்து வருகிறது.

**8. விலங்குகள் வதை தடுப்பு (திருத்தம்) மசோதா, 2022இன்படி, ஒரு விலங்கைக் கொன்றால் விதிக்கப்படும் அதிகபட்ச அபராதம் எவ்வளவு?**



அ. ரூ.1 இலட்சம் **ஆ. ரூ.5 இலட்சம் ☑**

இ. ரூ.10 இலட்சம் ஈ. ரூ.25 இலட்சம்

✓ மீன்பிடி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட விலங்குகள் வதை தடுப்பு (திருத்தம்) மசோதா, 2022, பொதுமக்களின் கருத்துக்கேட்புக்காக வெளியிடப்பட்டுள்ளது. 'அருவருக்கத்தக்க வன் கொடுமை' என்ற புதிய பிரிவின்கீழ், "விலங்குப் புணர்வு" உட்பட 61 சட்டத்திருத்தங்களை அது ஒரு குற்றமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இது ₹50,000 முதல் ₹75,000 வரை அபராதம் அல்லது விலங்கின் மதிப்பு இதில் எது அதிகமோ அதனை அபாராதமாகவோ அல்லது ஓராண்டு முதல் மூவாண்டு வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டையும் குற்றத்திற்கான தண்டனையாக விதிக்க பரிந்துரைக்கிறது. விலங்கொன்றைக் கொல்வதற்காக, அதிகபட்சமாக ஐந்தாண்டுகள் வரை சிறைத்தண்டனையை விதிக்கவும் இவ்வரைவு மசோதா முன்மொழிகிறது.

### 9. அணுவாற்றலில் இயங்கும், 'யாகுடியா' என்ற பனி உடைப்புக் கப்பலை அறிமுகப்படுத்திய நாடு எது?



**அ. ரஷ்யா ☑**

ஆ. உக்ரைன்

இ. ஜப்பான்

ஈ. இஸ்ரேல்

✓ ரஷ்யா அண்மையில் வடமேற்கு ரஷ்யாவில் உள்ள புனித பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள பால்டிக் கப்பல்கட்டும் தளத்தில் அணுவாற்றலில் இயங்கும், 'யாகுடியா' என்ற பனி உடைப்புக் கப்பலை அறிமுகப்படுத்தியது. இந்த விழாவில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மெய்நிகராக கலந்துகொண்டார். 'யாகுடியா' ரஷ்யாவின் ரோசாட்டம் ஸ்டேட் அணுவாற்றல் கழகத்திற்காக கட்டப்பட்டுவரும், 'திட்டம்–22220 அணுவாற்றலால் இயங்கும் பனி உடைப்புக்கப்பல்கள்' வரிசையில் வருகிறது. இந்த வகை கப்பல்கள் உலக அளவில் மிகப்பெரியவையும் சக்திவாய்ந்தவையும் ஆகும்.

### 10. 'UNESCO–இந்தியா–ஆப்பிரிக்கா (UIA) ஹேக்கத்தானை' நடத்தும் நகரம் எது?




அ. மும்பை

**ஆ. நொய்டா பெருநகரம் ☑**

இ. காந்திநகர்

ஈ. ஜெய்ப்பூர்

✓ நொய்டா பெருநகரத்தில் நடைபெற்ற UNESCO–இந்தியா–ஆப்பிரிக்கா (UIA) ஹேக்கத்தான் நிகழ்ச்சியில் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் உரையாற்றினார். இந்தியா மற்றும் 22 ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த இளம் தொழில்முனைவோர் பங்கேற்கும் இந்த ஹேக்கத்தானை கல்வி அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவு, AICTE மற்றும் UNESCO ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. உதயம் சக்தி இணையதளத்தில் பதிவு செய்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோர்கள்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறையில் பெண் தொழில்முனைவோர்களுக்கு நடுவண் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சகத்தின்மூலம் அளிக்கப்படும் நிதித்திட்டங்கள், கொள்கைகள் குறித்த தகவல்களை உதயம் சக்தி இணையதளம் (https://udyam–sakhi.com) அளிக்கிறது. 2022 அக்டோபர் மாதம் வரை உதயம் சக்தி இணையதளத்தில் பதிவுசெய்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோர்களின் மாவட்ட வாரியான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி இராணிப்பேட்டையில் 334 பேர், சேலத்தில் 163 பேர், திருவண்ணா மலையில் 210 பேர், வேலூரில் 360 பேர் என மொத்தம் 1067 பெண் தொழில்முனைவோர்கள் உதயம் சக்தி இணையதளத்தில் பதிவுசெய்துள்ளனர்.

---

**2. ஜி20: முதலாவது நிதிசார் கூட்டம் பெங்களூருவில் நாளை தொடக்கம்.**

இந்தியாவின் ஜி20 தலைமையின்கீழ் முதலாவது நிதி மற்றும் மத்திய வங்கி பிரதிநிதிகள் கூட்டம், பெங்களூருவில் டிச.13 முதல் 15 வரை நடைபெறவுள்ளது. இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின்கீழ் நிதி வழிமுறை குறித்த விவாதங்களின் தொடக்கமாக நடைபெறும் இந்தக் கூட்டத்தை மத்திய நிதி அமைச்சகமும், இந்திய ரிசர்வ் வங்கியும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. "21ஆம் நூற்றாண்டின் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள பலதரப்பு வளர்ச்சி வங்கிகளை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் குழு விவாதமும் நடைபெறும். "பசுமை நிதியளிப்பில் மத்திய வங்கிகளின் பங்கு" என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடைபெறவுள்ளது.

---

**3. PARAVAI திட்டம்.**

தமிழ்நாட்டின் காவல்துறையானது PARAVAI – Personality and Attitude Reformation Assistance Venture for Affirming Identity என்ற திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. 18–24 வயதுக்குட்பட்ட முதல்முறை குற்றம் செய்தோரை சீர்திருத்தி அவர்களை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைத்து அதன்மூலம் அவர்கள் மீண்டும் குற்றவாழ்க்கைக்கு திரும்பாமல் தடுப்பதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4. அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்: நாட்டிலேயே முதலிடம் பெற்று தமிழ்நாடு சாதனை.**

அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தியதில் நாட்டிலேயே முதலிடம் பெற்று தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. அனைத்து மக்களுக்கும் தரமான, விலையில்லா மருத்துவ சேவை வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டதுதான் இந்த 'அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்'. ஆண்டுதோறும் டிச.12ஆம் தேதியன்று அனைவருக்கும் நலவாழ்வு திட்ட நாள் கொண்டாடப்படுகிறது.

---

**1. ஆண்டுதோறும் UNICEF நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. டிசம்பர்.10

**ஆ. டிசம்பர்.11 ☑**

இ. டிசம்பர்.14

ஈ. டிசம்பர்.15

✓ ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.11 அன்று UNICEF நாள் கொண்டாடப்படுகிறது. UNICEF முதலில் ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு குழந்தைகளுக்கான அவசரகால நிதியம் என்று அழைக்கப்பட்டது; தற்போது அது அதிகாரப்பூர்வமாக ஐநா குழந்தைகள் நிதியம் என்று அழைக்கப்படுகிறது. ஐநா பொதுச்சபையால் இரண்டாம் உலகப்போரில் அழிவுற்ற நாடுகளில் உள்ள சிறார்களுக்கு உணவு & சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் இது ஆரம்பிக்கப்பட்டது. இது குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கிறது மற்றும் அவர்களின் திறனை நிறைவேற்ற உதவுகிறது.

**2. அதன் பிரத்யேக காலநிலை மாற்ற இயக்கத்தைத் தொடங்கிய முதல் மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. தெலுங்கானா

ஈ. ஒடிஸா

✓ தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதையும், அவற்றை மீட்டெடுப்பதையும் நோக்கமாகக்கொண்ட தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தால் (TNGCC) மாநிலத்தின் காலநிலை செயல்திட்டம் செயல்படுத்தப்படும். 2030–க்குள் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள்மூலம் சரிபாதியளவு மின்சாரத்தை உற்பத்திசெய்ய திட்டமிட்டுள்ளதால், தற்போதுள்ள நிலக்கரி மின்னுற்பத்தி வசதிகளுடன் மேற்கொண்டு எதையும் சேர்ப்பதில்லை எனத் தமிழ்நாடு முடிவு செய்துள்ளது.

**3. 2022 – உலக மலைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Climate Change and Mountains

**ஆ. Women move mountains ☑**

இ. Protect Mountains

ஈ. Mountains are Monuments



✓ ஐநா பொதுச்சபையானது 2002ஆம் ஆண்டை ஐநா சர்வதேச மலைகள் ஆண்டாக அறிவித்தது. கடந்த 2003ஆம் ஆண்டில் டிச.11ஆம் தேதியை, 'உலக மலைகள் நாள்' என ஐநா அறிவித்தது. ஐக்கிய நாடுகள் அவையின் உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) இந்நாளது கொண்டாட்டத்திற்கான ஒருங்கிணைப்பு நிறுவனமாக உள்ளது. "Women move mountains" என்பது இந்த ஆண்டு (2022) உலக மலைகள் நாளுக்கானக் கருப்பொருளாகும். 2022 – உலக மலைகள் நாளானது மலைவாழ் பெண்டிர்க்கு அதிகாரமளிப்பதன் அவசியம்குறித்த விழிப்பை ஏற்படுத்துகிறது.

**4. 'அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு குறித்த தேசிய மாநாட்டை' நடத்திய நகரம் எது?**

அ. புனே

**ஆ. வாரணாசி ☑**

இ. காந்தி நகர்

ஈ. மைசூரு



✓ அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு குறித்த இரண்டு நாள் தேசிய மாநாட்டை வாரணாசியில் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சம் ஏற்பாடு செய்தது. நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா, AB–HWCs, Tele–MANAS ஆகியவற்றுக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களுடன், CHO–களுக்கான பயிற்சித்தொகுதிகள் & SASHAKT இணையதளம் ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தினார். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களையும் அவர் அப்போது பாராட்டினார்.

**5. G20இன் முதலாவது நிதிசார் கூட்டத்தை நடத்தும் நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. பெங்களூரு ☑**

இ. சென்னை

ஈ. கொல்கத்தா




✓ டிச.13–15 வரை நடைபெறும் G20இன் முதலாவது நிதி மற்றும் மத்திய வங்கி பிரதிநிதிகள் கூட்டத்தை பெங்களூரு நடத்துகிறது. G20இன் நிதி மற்றும் மத்திய வங்கி பிரதிநிதிகள் கூட்டத்தை நிதியமைச்சகம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி இணைந்து நடத்துகிறது. இந்திய G20 தலைமையின்கீழ் நிதிசார் நிகழ்ச்சிநிரல் குறித்த விவாதங்களின் தொடக்கத்தை இந்தச் சந்திப்பு குறிக்கின்றது. 2023 பிப்ரவரி 23–25 தேதிகளில் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டம் பெங்களூருவில் நடைபெறும்.

**6. நாட்டின் முதல் ஒட்டி (sticker) அடிப்படையிலான பற்றட்டையான 'FIRSTAP'ஐ அறிமுகப்படுத்திய வங்கி எது?**

அ. ஆக்சிஸ் வங்கி

**ஆ. IDFC ஃபர்ஸ்ட் வங்கி ☑**

இ. பந்தன் வங்கி

ஈ. HDFC வங்கி




✓ IDFC ஃபர்ஸ்ட் வங்கி 'FIRSTAP'ஐ அறிமுகப்படுத்தியது. நாட்டின் முதல் ஸ்டிக்கர் அடிப்படையிலான இப்பற்றட்டையை இந்திய தேசிய கொடுப்பனவு கழகத்துடன் (NPCI) இணைந்து IDFC ஃபர்ஸ்ட் வங்கி அறிமுகப்படுத்தியது. ஸ்டிக்கர் அடிப்படையிலான இந்தப் பற்றட்டை வழக்கமான பற்றட்டையைவிட 1/3 பங்கு அளவே இருக்கும். அண்மைப் புலத் தொடர்பு (NFC)–செயல்படுத்தப்பட்ட விற்பனை முகத்தில் ஸ்டிக்கரைத் தட்டுவதன்மூலம் இதைப் பயன்படுத்தலாம்.

**7. "Illegal Wildlife Trade and Climate Change: Joining the Dots" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ. UNFCCC

**ஆ. UNODC ☑**

இ. FAO

ஈ. UNEP

UNODC
United Nations Office on Drugs and Crime

✓ போதைப்பொருள் & குற்றங்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தலைமை அலுவலகமானது (UNODC) "Illegal Wildlife Trade and Climate Change: Joining the Dots" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. சட்டத்துக்குப்புறம்பான வனவிலங்கு வர்த்தகத்தைக் ஒழிப்பதற்கான முயற்சிகள் என்பது இயற்கைப் பாதுகாப்பு பிரச்சனை மட்டுமல்ல, காலநிலை மாற்றத்தைத் தணிப்பது மற்றும் மிக நிலையான மற்றும் நெகிழ்வான எதிர்கால காலநிலையை உறுதிசெய்வது ஆகிய இரண்டின் முக்கிய பகுதியாகும் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

**8. 'eGramSwaraj மற்றும் Audit Online' என்பது கீழ்க்காணும் எந்த நடுவண் அமைச்சகத்தின் முனைவுகளாகும்?**

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑**

Ministry of Panchayati Raj
Government of India

இ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ. MSME அமைச்சகம்

✓ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின், 'eGramSwaraj' மற்றும் 'இணையவழி தணிக்கை' ஆகிய இரு முனைவுகளும் மின்னாளுகைக்கான தேசிய விருதுகளின்கீழ் 'தங்க' விருதை வென்றுள்ளன. 'e–Panchayat Mission Mode' திட்டம், மின்னாளுகைக்கான தேசிய விருதுகளின் "டிஜிட்டல் உருமாற்றத்திற்கான அரசு செயல்முறை மறு–வடிவமைப்பில் சிறப்பானது" என்ற பிரிவின்கீழ் விருது வென்றுள்ளது.

**9. 'எக்குவடோரியல் கினியா' என்ற நாடு அமைந்துள்ள பகுதி எது?**




அ. ஆஸ்திரேலியா

ஆ. ஆசியா

இ. அமெரிக்கா

**ஈ. ஆப்பிரிக்கா ☑**

✓ எக்குவடோரியல் கினியாவின் அதிபர் தியோடோரோ ஒபியாங் நுகுமா எம்பாசோகோ மத்திய ஆப்பிரிக்க நாட்டில் நடைபெற்ற மறுதேர்தலில் வெற்றிபெற்று 6ஆவது முறையாக பதவியேற்றுள்ளார். நாற்பதாண்டுகளுக்கும் மேலாக அதிபராக பதவி வகித்து உலகின் மிகநீண்ட அதிபராக பதவி வகித்த நபராக அவர் உள்ளார். ஒபியாங் தனது 43 ஆண்டுகால ஆட்சியை நீட்டித்து மேலும் ஏழு ஆண்டுகள் அதிபராக இருக்கவுள்ளார்.

**10. டர்ஃப்–2022 நிகழ்வில், 'ஆண்டின் சிறந்த பாரா விளையாட்டு ஆளுமை' என்ற விருதை வென்றவர் யார்?**



**அ. அவனி லெகரா ☑**

ஆ. தீபா மாலிக்

இ. மாரியப்பன் தங்கவேலு

ஈ. தேவேந்திர ஜஜாரியா

✓ பாராலிம்பிக் பதக்கம் வென்ற அவனி லெகாரா, FICCIஇன் டர்ஃப்–2022 மற்றும் இந்திய விளையாட்டு விருதுகளில் 'ஆண்டின் சிறந்த பாரா விளையாட்டு ஆளுமை' என்ற விருதைப்பெற்றார். முன்னாள் இரஞ்சி கிரிக்கெட் வீரர் சர்கார் தல்வாருக்கு இவ்வாண்டின் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது. இவ்வாண்டின் 'சிறப்பு விளையாட்டு வீரர்' என ஷ்ரே காத்யன் அங்கீகரிக்கப்பட்டார். விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம் என ஒடிஸா மாநிலம் அங்கீகரிக்கப்பட்டது. அகில இந்திய செஸ் கூட்டமைப்பு இந்த ஆண்டின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பு விருதை வென்றது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நேரடி வரி வசூல் 24% அதிகரிப்பு.**

நடப்பு நிதியாண்டில் இதுவரை நேரடி வரி வசூல் 24% அதிகரித்து ₹8.77 இலட்சம் கோடியாகி உள்ளதாக நடுவண் அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கை: நடப்பு 2022–23 நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் நேரடி வரியாக ₹8.77 லட்சம் கோடி வசூலாகி உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 24.26% அதிகம். நடப்பு நிதியாண்டில் நேரடி வரியாக மொத்தம் ₹14.2 இலட்சம் கோடி வசூலாகும் என பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கடந்த எட்டு மாதங்களில் மட்டும் 61.79% வசூலாகியுள்ளது. கடந்த 2021–22 நிதியாண்டில் நேரடி வரியாக ₹14.1 லட்சம் கோடி வசூலானது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தனிநபர் வருவாய் & பெருநிறுவனங்களின் வருவாய்மீது விதிக்கப்படும் வரி நேரடி வரி என அழைக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இதுவரை, கூடுதலாக வரி செலுத்தியவர்களுக்கு ₹2.15 இலட்சம் கோடி நிதி திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 67% அதிகமாகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரியாக (GST) மாதந்தோறும் ₹1.45 இலட்சம் கோடி முதல் ₹1.5 இலட்சம் கோடி வரை வசூலாகி வருகிறது. இது மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.

---

**2. பசுமை தொழில்நுட்பம்மூலமாக புதிய வேலைவாய்ப்புகள்: பருவநிலை மாற்ற இயக்க அறிக்கையில் இலக்கு.**

பசுமை தொழில்நுட்பம்மூலமாக புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கத்துக்கான திட்ட அறிக்கையில் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின், அண்மையில் தொடக்கி வைத்தார். அப்போது, அவர் அதற்கான திட்ட அறிக்கையையும் வெளியிட்டார். மேலும், அதில் கூறப்பட்டுள்ளதாவது: பருவநிலை மாற்றமானது, இயற்கைச்சூழல், மனித உயிர்கள், பொருளாதார வளம் போன்றவற்றில் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மிகநீண்ட தெளிவான தொலைநோக்கு, சிறந்த தலைமை, நல்ல புரிதல்போன்ற அம்சங்களே பருவநிலை மாற்ற எதிர்கொள்ளலுக்குத் தேவையாக இருக்கின்றன.

இதனை மனதில் கொண்டே தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் சில இலக்குகளை முன்வைத்து இயங்கவுள்ளது. தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி முகமைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியன பருவநிலை மாற்றம், பேரிடர் தணிப்பு போன்ற பிரிவுகளில் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றன. இந்த அனுபவங்கள், பருவநிலை மாற்றக் கொள்கைகளை வகுக்கும் போது பயன்படுத்திக் கொள்ள வழிசெய்யப்படும். பல்வேறு விதமான பருவநிலை மாற்ற பிரச்னைகள், கடல்நீர்மட்டம் உயர்வது போன்றவற்றுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும்.

பைங்குடில் வாயுக்களால் ஏராளமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனைக் குறைப்பதற்குத் தேவையான பணிகளை பருவநிலை மாற்ற இயக்கம் மேற்கொள்ளும். தூய மற்றும் பசுமை எரிசக்தியை பயன்படுத்தச் செய்வது, சூழலைப் பாதிக்காத பொதுப்போக்குவரத்தை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது, மரபுசாரா எரிசக்திகளை அதிகம் பயன்படுத்தச் செய்வது போன்ற அம்சங்களை பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் மரங்களின் அளவை 23.7 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் போன்றவற்றுடன், பருவநிலை மாறுபாடு இயக்கம் இணைந்து பணியாற்றும். பருவநிலை மாறுபாடு பிரச்னையை எதிர்கொள்ள நவீன தொழில்நுட்பங்கள் ஆராயப்படும். இதுதொடர்பான நிபுணத்துவம்பெற்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் பருவநிலை மாற்ற இயக்கம் தொடர்ந்து பணியாற்றும் என திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. 41.5 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்பு: நடுவண் அரசு**

கடந்த 2005–2021 வரை 41.5 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர் என மாநிலங்களவையில் நடுவண் அரசு தெரிவித்தது.

மாநிலங்களவையில் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது நடுவண் திட்ட அமைச்சகத்தின் இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறப்பட்டிருப்பதாவது: ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு மற்றும் ஐநாஇன் மேம்பாட்டுத் திட்டம் வெளியிட்ட, 'உலக பலபரிமாண வறுமைக் குறியீடு 2022'இன்படி, இந்தியாவில் 2005–06 முதல் 2019–21 வரையிலான கால அளவில் 41.5 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். NITI ஆயோக் வெளியிட்ட 'பலபரிமாண வறுமைக் குறியீடு–2021' தரவுகள்படி, இந்திய மக்கள்தொகையில் 25.01 சதவீதம் பேர் வறுமையில் உள்ளனர். இது ஊரகங்களில் 32.75 சதவீதமாகவும் நகரங்களில் 8.81 சதவீதமாகவும் உள்ளது. இத்தரவுகள் 2019–2021 வரையில் மேற்கொள்ளப்பட்ட தேசிய குடும்பநல சுகாதரக் கணக்கெடுப்பு–5இலிருந்து பெறப்பட்டது.

**1. இந்தியாவில் 2022–நவம்பர் மாதத்திற்கான நுகர்வோர் விலைக்குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்க சதவீதம் என்ன?**

அ. 5.22%

**ஆ. 5.88% ☑**

இ. 6.22%

ஈ. 8.88%




✓ நுகர்வோர் விலைக்குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும் இந்தியாவின் சில்லறை பணவீக்கம், 2022 நவம்பர் மாதத்தில் 11 மாதங்களில் இல்லாத அளவுக்கு 5.88%ஆகக் குறைந்துள்ளது. 2022 அக்டோபரில் பணவீக்க சதவீதம் 6.77%ஆக இருந்தது. உலகளாவிய பண்டங்களின் விலைவீழ்ச்சி மற்றும் அதீத கடன் செலவுகள் காரணமாக இது நிகழ்ந்துள்ளது. பணவீக்க சதவீதம் இந்த ஆண்டில் முதன்முறையாக இந்திய ரிசர்வ் வங்கியின் 2–6% சகிப்புத்தன்மை வரம்பிற்குள் வந்தது. தொழிற்துறை உற்பத்தி குறியீட்டின் அடிப்படையில் அளவிடப்படுகிற தொழிற்சாலை உற்பத்தியானது அக்டோபரில் 4% என இருந்தது.

**2. 2022 ஹுருன் குளோபல் பட்டியலில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 3

**ஆ. 5 ☑**

இ. 7

ஈ. 10

HURUN INDIA

✓ 2022–ஹுருன் குளோபல் பட்டியலின்படி, உலகின் மிகவும் மதிப்புமிக்க ஐந்நூறு நிறுவனங்களில் இருபது இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளதை அடுத்து, இந்தியா ஐந்தாம் இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் 20 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், இந்தியா 9ஆமிடத்திலிருந்து 5ஆமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

✓ $202 பில்லியன் டாலர்களுடன் ரிலையன்ஸ் தொழிற்துறைகள் இந்தியா அளவில் முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து TATA கன்சல்டன்சி சர்வீசஸும், HDFC வங்கியும் உள்ளன. ரிலையன்ஸ் தொழிற்துறைகள் (34) மற்றும் TATA கன்சல்டன்சி சர்வீசஸ் (65) ஆகிய இரண்டு இந்திய நிறுவனங்கள் மட்டுமே பட்டியலின் முதல் 100 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளன. 260 நிறுவனங்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

**3. அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்த மாநிலம் எது?**

அ. ஹரியானா

ஆ. ஹிமாச்சல பிரதேசம்

**இ. கோவா ☑**

ஈ. தெலுங்கானா



✓ கோவாவில் நிறுவப்பட்டுள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், காசியாபாத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய யுனானி மருத்துவ நிறுவனம் மற்றும் தில்லியில் நிறுவப்பட்டுள்ள தேசிய ஓமியோபதி நிறுவனம் ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோதி மெய்நிகராக தொடங்கி வைத்தார். 9ஆவது உலக ஆயுர்வேத மாநாடு மற்றும் ஆரோக்கியா கண்காட்சியிலும் அவர் உரையாற்றினார். கோவா மாநில முதலமைச்சர் பிரமோத் சாவந்த், தற்காலில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத கல்வி நிறுவனத்தில் கோவா மக்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படும் எனக் கூறினார்.

**4. ஒருநாள் இன்னிங்ஸில் விரைவாக 200 இரன்கள் எடுத்த கிறிஸ் கெயிலின் சாதனையை முறியடித்த இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ. ரோஹித் சர்மா

ஆ. இரவீந்திர ஜடேஜா

**இ. இஷான் கிஷன் ☑**

ஈ. K L இராகுல்



✓ வங்காளதேசத்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய இளம் கிரிக்கெட் வீரர் இஷான் கிஷான் பல்வேறு சாதனைகளைப் படைத்தார். சச்சின் டெண்டுல்கர், ரோகித் சர்மா மற்றும் வீரேந்திர சேவாக் ஆகியோருக்குப் பிறகு, ஒருநாள் போட்டிகளில் இரட்டைச்சதம் அடித்த உலகின் ஏழாவது கிரிக்கெட் வீரர் ஆனார் அவர். 126 பந்துகளில் அவர் இரட்டைச்சதம் அடித்தார். ஒரு நாள் இன்னிங்ஸில் வேகமாக 200 ரன்களைக் கடந்த கிறிஸ் கெயிலின் சாதனையையும் இஷான் கிஷன் முறியடித்தார்.

**5. 2022 – சர்வதேச கடன் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ. உலக வங்கி ☑**

THE WORLD BANK

ஆ. உலக பொருளாதார மன்றம்

இ. ADB

ஈ. AIIB

✓ உலக வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச கடன் அறிக்கையின்படி, சஹாராவடி ஆப்பிரிக்காவில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம்கொண்ட நாடுகளின் கடன் கடந்த 2021ஆம் ஆண்டில் $789 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது. அந்தப் பிராந்தியத்தின் தற்போதைய கடன் சுமையானது அதன் திருப்பிச்செலுத்தும் திறனுக்கு அப்பாற்பட்டு உள்ளது.

**6. 'கங்கை நீர் வழங்கல் திட்டத்தைத்' தொடங்கிய மாநிலம் எது?**

அ. உத்தர பிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. உத்தரகாண்ட்

ஈ. மேற்கு வங்கம்



✓ பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் பீகார் மாநிலத்தில் திட்டமொன்றைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின் தெற்குப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு வழங்குவதற்காக வெள்ளநீர் சுத்திகரிக்கப்படும். கங்கை நீர் வழங்கல் திட்டத்தின்கீழ், திட்டத்தின்மூலம் ஒரு நபருக்கு மொத்தம் 135 லிட்டர் நீர் வழங்கப்படும். இதற்கான திட்ட மதிப்பீடு ₹4500 கோடியாகும்.

**7. ஹரிமௌ சக்தி–2022 என்பது இந்தியாவிற்கும் கீழ்க்காணும் எந்நாட்டிற்கும் இடையே நடைபெறும் இருதரப்புப் பயிற்சியாகும்?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. மலேசியா ☑**

இ. சிங்கப்பூர்

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்



✓ இந்தியா–மலேசியா கூட்டு இராணுவப்பயிற்சியான ஹரிமௌ சக்தி–2022 சமீபத்தில் மலேசியாவில் உள்ள புலாய் கிளாங்கில் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் இந்திய இராணுவத்தின் கர்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவும் மலேசிய இராணுவத்தின் இராயல் மலாய் படைப்பிரிவும் கலந்துகொண்டது. ஹரிமௌ சக்தி என்பது கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்படுகிற இந்திய மற்றும் மலேசிய இராணுவங்களுக்கு இடையிலான ஒரு வருடாந்திர பயிற்சி நிகழ்வாகும்.

**8. மும்பை பங்குச்சந்தையின் (BSE) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயலதிகாரியாக அங்கீகரிக்கப்பட்டவர் யார்?**

அ. சுந்தரராமன் இராமமூர்த்தி ☑



ஆ. உர்ஜித் படேல்

இ. அரவிந்த் சுப்ரமணியம்

ஈ. சித்ரா இராமகிருஷ்ணன்

✓ மும்பை பங்குச் சந்தையின் (BSE) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக சுந்தரராமன் இராமமூர்த்தியை நியமிக்க இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஒப்புதலளித்துள்ளது. சுந்தரராமன் இராமமூர்த்தி தற்போது பாங்க் ஆஃப் அமெரிக்காவில் இந்தியாவின் தலைமை இயக்க அதிகாரியாக உள்ளார். அவர் 2014 வரை இந்தியாவின் தேசிய பங்குச் சந்தையில் (NSE) பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

**9. இந்திய கடற்படையின் ஆய்வுக்கலமான, 'இக்ஷாக்'ஐ கட்டிய நிறுவனம் எது?**

அ. DRDO

ஆ. HAL

**இ. GRSE ☑**

ஈ. BEL

✓ இந்திய கடற்படையானது GRSE/L&T நிறுவனத்தால் கட்டப்பட்ட நான்கு ஆய்வுக் கலங்களுள் (பெரிய) மூன்றாவது கலமான, 'இக்ஷாக்'ஐ தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள காட்டுப்பள்ளியில் வைத்து அறிமுகப்படுத்தியது. நான்கு ஆய்வுக்கலங்களை உருவாக்குவதற்கான இந்த ஒப்பந்தம் கடந்த 2018ஆம் ஆண்டில் கொல்கத்தாவின் கார்டன் ரீச் கப்பல்கட்டும் நிறுவனம் (GRSE) மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் இடையே கையெழுத்தானது. இதன் மொத்த மதிப்பு ₹2,435 கோடியாகும்.

**10. குரங்கம்மை நோய்க்கு உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) பரிந்துரைக்கப்பட்ட புதிய பெயர் யாது?**

**அ. mpox ☑**




ஆ. Movid

இ. H1M1

ஈ. Mon-52

✓ உலக சுகாதார நிறுவனமானது குரங்கம்மை நோய்க்கு 'mpox' எனப் பெயர்மாற்றம் செய்துள்ளது. இந்த நோயின் உண்மையான பெயர் பாகுபாடு மற்றும் இனவெறியைக் குறிப்பிடும் விதத்தில் உள்ளதால் இந்தப் பெயர் மாற்றம் நிகழ்ந்துள்ளது. குரங்கம்மை நோய்க்கான புதிய பெயர் 'mpox' என்று ஐநா சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. குரங்கம்மை மற்றும் 'mpox' ஆகிய இரண்டு பெயர்களும் அடுத்த ஆண்டு பயன்படுத்தப்படும். பழைய பெயர் படிப்படியாக நீக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்.**

புதிதாக ஒப்புதல் பெறப்பட்ட 'மிஷன் சக்தி' திட்டத்தின்கீழ் தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம், 'பல்னா திட்டம்' என பெயர் சேர்க்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது பணிபுரியும் தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 ஆண்டுகள் வரையிலான குழந்தைகளுக்கு தினசரி பராமரிப்பு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டு, குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நிலவரத்தை மேம்படுத்தி வருகிறது. 2020–21ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்காக பட்ஜெட் ஒதுக்கீடு ₹75 கோடியாக இருந்தது. 2021–22ஆம் நிதியாண்டில் ₹53 கோடியாக இருந்தது.

---

**2. 6 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்குத் தடை: தமிழ்நாடு அரசு உத்தரவு.**

அபாயகரமான 6 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு தமிழ்நாடு அரசு அதிரடியாக தடைவிதித்தது.

**ஆணை விவரம்:** மோனோக்ரோபாஸ், புரோபினோபாஸ், செப்கேட், சைபர்மெத்ரின் கலந்த புரோபினோபாஸ், சைபர் மெத்ரின் கலந்த குளோர்பிரிபாஸ் மற்றும் குளோர்பிரிபாஸ் ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளை 60 நாள்களுக்கு தற்காலிக அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. மஞ்சள் பாஸ்பரஸ் பயன்பாட்டுக்கு முற்றிலும் தடைவிதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதால், தடை உடனடியாக அமலுக்கு வருகிறது.

---

**3. நகர்ப்புற உள்கட்டமைப்புக்கு நிதியுதவி: தமிழக திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் பரிமாற்றம்.**

நீடித்த நகர்ப்புற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், தமிழக திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

நீடித்த நகர்ப்புற உள்கட்டமைப்புக்கான நிதியுதவித் திட்டத்தை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கியும், தமிழ்நாடு அரசும் இணைந்து செயல்படுத்தி வருகின்றன. சுற்றுச்சூழலை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, அதன் மூலம் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது ஆகியன இந்தத் திட்டத்தின் நோக்கம். இந்தத் திட்டத்தின் முதல் நிலை ₹1969.47 கோடி மதிப்பைக் கொண்டது. திட்டத்தின் இரண்டு கட்ட பணிகளும் இந்த மாதத்தில் நிறைவடையும். இதன் தொடர்ச்சியாக, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி ₹4,250 கோடி மதிப்பில் மூன்றாம்கட்ட நீடித்த நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளது.

---